**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 109/2016**

**2026 ம் ஆண்டு மார்ச் 11-ம் நாள் புதன்கிழமை**

பெயர் : ஆறுமுகம்

சாட்சி : PW1

தந்தை பெயர் : கிருஷ்ணசாமி

நேரம் : 1.05 P.M to 1.55PM

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பரிவர்த்தனை பத்திரம் என்றால் சரிதான். பரிவர்த்தனை பத்திரத்தில் குமாரவேல், குமாரசாமி, ஆறுமும், அன்பழகன் அன்பரசன் மற்றும் தமிழ்மாறன், ஆகியோர்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அன்பழகன் என்னுடைய மகன் ஆவார். வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் அன்பழகன் மற்றும் தனக்காகவும் இளவருக்காவும் என்றுதான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் குமாரவேல் மற்றும் குமாரசாமி ஒரு தரப்பினராகவும் ஆறுமுகம் ஆகிய நான் அன்பழகன் , அன்பரசன் மற்றும் தமிழ்மாறன் ஆகியோர்கள் மற்றொரு தரப்பினராகவும் ஆக இரு தரப்பினராக கொண்டு பரிவர்த்தனை ஆவணம் ஏற்பட்டதாக ஆவணம் கண்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு அன்பழகன் என்பவரும் உரிமையாளர் என்று தான் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் அன்பழகன் என்பவர் பெயரை வாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அன்பழகன் வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை குறித்து பாகம் வேண்டாம் என்றதாலும் வேறு இடத்தில் சொத்து அவருக்கு ஒதுக்கப்பட்டதாலும் நான் மற்றும் எனது பேர குழந்தைகள் பரிவர்த்தனையில் கண்ட சொத்தை பராமரித்து வருவதாலும் நாங்கள் மூன்று பேர் மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் மேற்படி சங்கதியான அன்பழகன் என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டு வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிராமாண

வாக்குமூலத்திலும் மேற்படி அன்பழகன் என்பவரை ஏன் சேர்க்கவில்லை என்ற காரணத்தையும் கூறவில்லை என்றால் சரிதான். அன்பழகன் என்பவர் அவசியமான தரப்பினர் என்பதாலும் அவரை இவ்வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. நான் தான் சொத்தை பராமரித்து வருவதால் அன்பழகன் என்பவரை வழக்கில் சேர்க்கவில்லை.

3. வா.சாஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் 6 பேர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததாலும் பக்கம் 2ல் முதல் பத்தியில் நாம் ஐவரும் சேர்ந்து நம் குடும்ப விவசாய நலனை முன்னிட்டு சம்மதித்து எழுதிக்கொண்ட பரிவர்த்தனை பத்திரம் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் 6 பேர்கள் குறிப்பிட்ட நிலையில் அதில் ஐவரால் மட்டும் பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று இருப்பதால் வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பத்திர எழுத்தர் தவறாக பிழை திருத்தத்துடன் எழுதிவிட்டார். வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரத்தில் குமாரசாமி குமாவேலுக்கு பாக பத்திரத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்று கண்டு எழுதப்பட்டுள்ள நிலையில் அந்த பாக பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

4. வா.சா.ஆ. 3 பரிவர்த்தனை ஆவணத்தில் எனக்கு உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்று கூறப்பட்டுள்ள நிலையில் உயிலையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் உயிலின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்று கூறப்பட்ட நிலையில் உயிலின் மூலம் எந்த சர்வே நம்பர் மற்றும் எவ்வளவு அளவுகள் கிடைக்கப்பெற்றது என்று எனது பிராதிலும் வா.சா.ஆ.3 லும் கண்டு எழுதப்படவில்லை என்றால் பல பரிவர்த்தனைகள் ஏற்பட்டதாலும் இந்த வழக்கு சொத்திற்குண்டான 48 செண்டிற்கு அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மேலும் உயிலில் பல சொத்துக்கள் இருப்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது சரியல்ல என்றாலும் வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் நானும் எனது சகோதரரும் சேர்ந்து கூட்டாக கிரையம் பெற்ற சொத்து என்று எழுதப்பட்டுள்ள நிலையில் எனக்கு

எவ்வளவு ஒதுக்கப்பட்டது அதற்கு உண்டான சர்வே எண் என்ன என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் நான் அதற்கு உண்டான அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் பரிவர்த்தனை ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதவில்லை. பரிவர்த்தனை மூலமாக 48 செண்டு என்று கண்டு எழுதப்பட்டுள்ளது. நான் 1978-ல் கிரையம் வாங்கியதாக வா.சா-அ.3 குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல 1978 ல் கிரையம் பெற்ற ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 3 ல் எனது தந்தை 1966 ல் கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள நிலையில் அந்த கிரைய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 3 பரிவர்த்தனை ஆவணத்தில் எனது தந்தைக்கு 1966 வருட கிரையம் பெற்ற சொத்தில் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்று கண்டுள்ள நிலையில் வாய்மொழி பாகமாக எவ்வளவு அளவுகள் மற்றும் என்ன சர்வே எண் கொண்ட சொத்து ஒதுக்கப்பட்டது என்று பரிவர்த்தனை ஆவணத்தில் இல்லை என்றால் ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

6. பாகத்தில் கிடைக்கப்பெற்றதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல எனது அப்பா சொத்தில் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்டது. வா.சா.ஆ 3 ல் சொத்து விவரத்தில் எங்கள் நால்வருக்கு பரிவர்த்தனை செய்ததாக கண்டுள்ள சொத்தில் சர்வே எண்.109/5 ல் 24 செண்டுக்கு மூல ஆவணம் அல்லது தாய் பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**<u>மதிய வேலைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி: 3.12 PM to 5.10PM</u>**

7. நான் என்னென்ன விவரங்கள் கூறி வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியும். வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்காவது அயிட்ட சொத்தான 109/5 ல் 24 செண்டிற்கு தனியாக செக்குபந்தி குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். மொத்தமாக தான் சொல்லப்பட்டுள்ளது. என்னுடைய வழக்குரையில் வழக்கு சொத்து விவரத்தில் 50 ஏர்ஸ் என்றும் வழக்குரையில் 1 ஏக்கர் 25 செண்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் பழைய இடத்திற்கும் புதிய இடத்திற்கும் மாறுபடும் போது மெட்ரிக் அளவுகள் மாறுபட்டு இருப்பதாலும் அளவுகள் மாறி இருக்கும். வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் 1வது நபரான நடேச படையாச்சி என்பவர் சுயமாக சம்பாரித்த சொத்து

என்று கண்டு எழுதப்பட்டுள்ள நிலையில் எந்த சொத்து என்ன சர்வே எண் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பெறப்பட்டது என்று கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் நடேச படையாச்சியிடமிருந்து எனது தந்தை கிரையம் பெற்ற நிலையில் காசிநாதன் என்பவர் ஏன் வா.சா.ஆ.9 ல் கையொப்பம் செய்துள்ளார் என்றால் நடேசன் பத்திரத்தில் காசிநாதனும் காசிநாதன் பத்திரத்தில் நடேசனும் கையொப்பம் செய்துள்ளார்கள். அதாவது காசிநாதனுக்கு பாகம் ஒதுக்கப்பட்ட மற்றொரு பத்திரத்தில் நடேச படையாச்சியும் காசிநாதன் படையாச்சியும் கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி நான் காசிநாதன் பத்திரத்தில் நடேசனும் நடேசன் பத்திரத்தில் காசிநாதனும் கையொப்பம் செய்துள்ளது பொய் என்பதும் வா.சா.ஆ.9 ஆவணம் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் கண்டுள்ள குமரவேல் மற்றும் குமாரசாமி ஆகிய இருவரும் எனது சகோதரரின் மகன்கள் ஆவார்கள். நானும் எனது சகோதர் மகன்களும் பிரதிவாதியிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டி வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணம் தயார் செய்ப்பட்டது என்றால் சரியல்ல. நான் மொத்தமாக வழக்கு சொத்தில் 50 ஏர்ஸ்க்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு சொத்தின் சர்வே எண்.109/4 18 ஏர்ஸ் 109/5 32 ஏர்ஸ் இரண்டும் சேர்ந்து 50 ஏர்ஸ் ஆகும். எனது வழக்கு சொத்திற்கு நான்கு எல்லைகள் என்னவென்றால் எனது நிலத்திற்கும் மேற்கு எனது நிலத்திற்கும் வேல்முருகன் நிலத்திற்கும் தெற்கு வேல்முருகன், ஆறுமுகம், சுப்ரமணியன் ஆகியோர்களின் இடத்திற்கும் கிழக்கு நல்லான் என்கின்ற ரத்தினசாமி ஆசைத்தம்பி குமாரசாமி என்கின்ற பாண்டுரங்கன் ஆகியோர்களின் நிலத்திற்கும் வடக்காக வழக்கு சொத்து அமைந்துள்ளது.

9. எனது தந்தை இரண்டு ஆவணங்கள் மூலம் கிரையம் வாங்கியுள்ளார். 1971 ல் மற்றும் 1976 ல் மற்றொரு கிரைய ஆவணங்கள் வாங்கியுள்ளார். 1971 ல் 23 செண்ட் கிரையம் பெற்றுள்ளார். 1976 ல் 19 செண்ட் கிரையம் பெற்றுள்ளார். எனது தந்தை கிரையம் பெற்றது 1971 மற்றும் 1976 ஆவணம் மட்டும் தான். எனது தந்தை கிருஷ்ணசாமிக்கு நானும் எனது சகோதரர் கலியபெருமாள் தான். மூன்று பெண் குழந்தைகள் அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. எனது சகோதரிகளின் பெயர்கள் சிவபாக்கியம், தையல்நாயகி, மீனாட்சி. மூன்று சகோதரிகளும் திருமணத்திற்கு பிறகு தான் இறந்து விட்டார்கள். வாய்மொழி பாகம் எந்த தேதி, வருடம், யார் முன்னிலையில் ஏற்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை.

10. எனது தந்தை சொத்தில் எவ்வளவு அளவுகள் கொண்ட சர்வே எண் எனக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு 28 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது. எனது தந்தை சொத்தான 42 செண்டு மற்றும் பூர்வீக சொத்தில் 28 செண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. 42 செண்டிற்கு அருகிற்கு பூர்விக சொத்தில் எவ்வளவு இடம் அமைந்துள்ளது என்றால் நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சுமார் 4 செண்டு இருக்கும். எனக்கு ஒதுக்கப்பட்ட 28 செண்டில் எனக்கு செக்கு பந்தி கிடையாது மொத்தமாக தான் அனுபவித்து வருகிறோம். எனது சகோதரர் கலியபெருமாளுக்கு எவ்வளவு சொத்து கொடுக்கப்பட்டது என்றால் 48 செண்டு கொடுக்கப்பட்டது. எனது தந்தை மற்றும் எனது சகோதரர் இருவரும் சேர்ந்து வாங்கியது தான் 48 செண்டு ஆகும்.

11. எனது தந்தை கிருஷ்ணசாமிக்கு ஐந்து குழந்தைகள் உள்ள நிலையில் நான் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல பெண் குழந்தைகளுக்கு பாகம் கிடையாது சீர் வரிசை செய்துவிட்டோம். தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரத்திலுள்ள செக்குபந்திக்கும் மற்றும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் என்னுடைய வழக்குரையில் 23 மற்றும் 28 செண்ட் கிரையத்தில் வாங்கியதாகவும் மற்றும் 48 செண்டு பரிவர்த்தனையாக கிடைத்ததாக கூறியுள்ள நிலையில் எந்தெந்த சொத்திற்கு அடுத்தது சொத்து அமைந்துள்ளது என்றும் எந்த திசையில் அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

12. வழக்குரையில் நான் நான்கு அயிட்ட சொத்துக்களை குறிப்பிட்ட நிலையில் அதற்கு உண்டான மாதிரி வரைபடம் மற்றும் சொத்தின் அமைவு இடத்தை விளக்கும் வகையாக வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என்னுடைய வழக்குரையில் பூர்வீகமாக 28 செண்ட் பாத்தியப்பட்டது என்றும் 2 மற்றும் 3 வாதிகளாக என்னுடைய பேர குழந்தைகளுக்கு 23 மற்றும் 26 செண்டு கிரையப் பெற்ற வகையில் பாத்தியப்பட்டது என்றும் 48 செண்ட் என்பது எங்கள் நால்வருக்கு பரிவர்த்தனை மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் வாதிகளாகிய எங்கள் மூவருக்கு மட்டும் வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அன்பழகன் பாகம் வேண்டாம் என்று கூறியதால் இவ்வழக்கில் அவரை சேர்த்து பரிகாரம் கோரவில்லை. நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தவறு என்றாலும் வழக்கு சொத்து விவரத்தில் ஒவ்வொரு வாதிகளுக்கும் உரிமையுடையதாக சொல்லப்படும் சொத்துக்களை தனித்தனியாக அட்டவனை காட்டாமல் தாக்கல் செய்திருப்பதால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

13. அன்பரசன் மற்றும் தமிழ்மாறன் பெயரில் 2001 ல் கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ..1 தாக்கல் செய்துள்ள நிலையில் வா.சா.ஆ.1 ல் சீனிவாசன், காசிநாதன் மற்றும் சின்னம்மாள் ஆகியோர்களுக்கு பாக பாத்தியமும் அனுபவமும் அடிப்படையில் கிரையம் செய்து கொடுப்பதாக கூறப்பட்டுள்ள நிலையில் அதற்கு உண்டான மூல பத்திரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கு ஆவணம் இல்லை. வா.சா.ஆ.4 பட்டா இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் 8 என்பது 18 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் கிராம நிர்வாக அலுவலர் திருத்தியது தான். வா.சா.ஆ.4 ஆவணம் பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் கிருஷ்ணன் மகன் ஆறுமுகம் மற்றும் 5 பேர் என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஏற்கெனவே எழுதி கொடுத்த நபர்களான நடேசன், காசி, வடிவேலு, சின்னம்மாள் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது.

14. வா.சா.ஆ.5 கலியபெருமாள் பெயரில் பட்டா ஒன்று தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வா.சா.ஆ.5 பட்டா அல்ல என்றால் சரியல்ல பட்டாதான். வா.சா.ஆ.5 ஆவணம் என்னால் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ல் வெவ்வேறு பட்டா என்று கூறினாலும் பட்டா எண்.757 என்று தான் இரு ஆவணத்திலும் கண்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ல் வா.சா.ஆ.4 எனது பெயரில் உள்ள ஆவணத்தில் 26 ஏர்ஸ்ம் வா.சா.ஆ.5 எனது சகோதரரின் பெயரில் உள்ள ஆவணத்தில் 50 ஏர்ஸ் என்று கண்டுள்ளது எதற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரத்தை என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் வா.சா.ஆ.2 ல் தேவநாதனிடம் இருந்து 26 செண்டு வாங்கியுள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவநாதனுக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டடது என்று வா.சா.ஆ.2 ல் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ.11 ஆவணம் தேவநாதன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் 24 செண்ட் தான் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.2 ல் 26 செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் தேவநாதனுக்கு பூர்வீகமாகவும் சொத்தை அளக்கும் போது 26 செண்ட் இருந்ததால் வா.சா.ஆ.2 ல் 26 செண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவநாதனுக்கு 24 செண்ட் தான் பாத்தியப்பட்ட நிலையில் 26 செண்ட் என்று குறிப்பிட்டு கிரையம் பெற்றது செல்லத்தக்கது அல்ல. தேவநாதனுக்கு 26 செண்ட் தான் பாத்தியப்பட்டது.

16. அன்பரசன் மற்றும் தமிழ்மாறன் ஆகியோர்க்கு அன்பழகன் என்ற தந்தை இருக்கும் போது தாத்தாவாகிய நான் எதற்காக பேர குழந்தைகள் பெயரில் கார்டியனாக என்னை வைத்து கொண்டு கிரையம் பெற்றேன் என்றால் நான் எனது பேர குழந்தைகளுக்கு சொத்தை வாங்கி தருவதால் என்னை காப்பாளராக நியமித்து என்னுடைய பணத்தை கொண்டு கிரையம் பெற்று கொடுத்தேன். வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்து விவரத்தில் செக்குபந்தி பாண்டுரங்கன் நிலத்துக்கு வடக்கு என்று கண்டுள்ளது இந்த பாண்டுரங்கன் என்பது 1ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரியல்ல. குமாரசாமி என்கின்ற பாண்டுரங்கனை தான். குமாரசாமி என்கின்ற பாண்டுரங்கன் என்பவர் நல்லான் என்பவரின் தம்பி ஆவார். அவர் தற்போது உயிருடன் இல்லை.

17. என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் ஆதியில் வழக்கு சொத்தின் முழு விஸ்தீரணமும் எனது தந்தை கிருஷ்ணசாமியின் பூர்வீக சொத்து ஆகும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 ஏக்கர் 25 செண்டு வழக்கு சொத்து முழுவதும் பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் முழுவதும் பூர்வீக சொத்து என்று கூறவில்லை. ஆவணமும் தாக்கல் செய்துள்ளேன். நான் என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்து முழுவதும் பூர்வீக சொத்து என்று குறிப்பிட்டுருந்தால் தவறு தான். பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை. என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் எனது தந்தை என்னென்ன சொத்துக்கள் யார் யாருக்கு எவ்வளவு அளவுகள் கொண்டு எப்போது விற்பனை செய்தார் என்று கூறவில்லை என்றால் நான் சொல்லவில்லை. என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் 17.07.2007 தேதி முதல் 2, 3 வாதிகள் சார்வாக எவருடைய இடையூறும் இன்றி தொடர்ச்சியாக அனுபவித்து வருகிறோம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

நான் தான் அனுபவித்து வருகிறேன். அன்பழகனுக்கோ 2 மற்றும் 3 வாதிகளுக்கோ வழக்கு சொத்தில் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு தான் உரிமையுள்ளது. கலியபெருமாளிடம் இருந்து கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் அதற்கு உண்டான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தகப்பனார் 1982 ல் காலமானார். வா.சா.ஆ.10 ஆன 1978 ல் கலியபெருமாள் மகன் கிருஷ்ணசாமி படையாட்சி பெயரில் வாங்கிய கிரைய பத்திரம் என்றால் என்னுடைய சகோதரர் வாங்கியது ஆகும். கலியபெருமாள் மகன் கிருஷ்ணசாமி அவருக்கு திருமணமாகி மனைவி பெயர் கலையரசி தான் என்றால் சரிதான் 1 பெண் குழந்தை மட்டும் உள்ளார். வா.சா.ஆ.10 ன்படி கலியபெருமாள் மகன் கிருஷ்ணசாமியின் வாரிசுதாரர்களுக்கு மட்டும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி மற்றும் குமாரசாமி, குமாரவேலு பாக அட்டவணை போட்டு கொண்டார்கள் பத்திரம் எழுதிகொண்டார்கள். கிருஷ்ணசாமியின் வாரிசுகளாகிய கலையரசி வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல. நான் என்னுடைய வழக்குரையில் பத்தி 9 ல் எனது பேர குழந்தைகளான 2 மற்றும் 3 வாதிகள் வழக்கு சொத்தின் கிழக்கு புறத்தில் 92 செண்ட் அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ள நிலையில் என்னுடைய பிராமான வாக்குமூலத்தில் நான் தான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளேன் என்றும் மேலும் என்னுடைய வழக்குரையில் நான் மற்றும் 2 மற்றும் 3 வாதிகள் வழக்கு சொத்தை கூட்டாக முன்னுக்குபின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவத்தில் உள்ளேன்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**/sd/K.ரேணுகாதேவி,**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பண்ருட்டி.